# புதிய பதவி உயர்வு

BSNL நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் நீண்ட நாட்களாக புதிய பதவி உயர்வு திட்டம் வராதா? என்ற ஏக்கத்துடன் நீண்ட நாள் கனவாய் காத்திருந்தார்கள். BSNL ஊழியர் சங்கம் பதவி உயர்வில் திருப்பு முனையாக 25 வருடங்களுக்குப் பிறகு 30.10.2008 அன்று பதவி உயர்வு கொள்கைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது.

NFTE சங்கம் 50 வருடங்களுக்கு மேல் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக இருந்து 2 பதவி உயர்வையே (16 வருடம் கழித்து OTBP/ 26 வருடம் கழித்துBCR) பெற்றுத் தந்தார்கள். அதில் கூடுதல் இன்கிரிமென்ட் (FR22 1(a) (i) கிடையாது. இன்றுவரை Classification உத்தரவு வந்து கொண்டிருக் கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். BSNLEU தலைமையிலான (UF) நான்கு ஆண்டு அங்கீகாரத்தில் 4 பதவி உயர்வுகள் பெற்றது. அனைத்து பதவி உயர்விற்கும் FR22 1(a) (i)..

இந்த திட்டம் அமுலானால் நம்மிடையே மிச்சமிருக்கின்ற உறுப்பினர்களையும் இழந்து விடுவோம் என்ற குறுகிய நோக்கமும், பயமும் இத்திட்டத்தை கொண்டுவரக்கூடாது என்று FNTOவுடன் கூட்டணி சேர்ந்து வேலைநிறுத்த அறைகூவல், தந்தி கொடுக்கும் போராட்டமென அறிவித்தார்கள். BSNL ஊழியர்கள் அவர்களை நிராகரித்தார்கள். விளைவு 15 தந்திகளே அகில இந்தியளவில் சென்றது. இது NFTE, FNTO கூட்டணிக்கு கிடைத்த முதல் தோல்வி.

NFTE கூட்டணி தேர்தலில் வெற்றி பெற்றால் அதிகாரிகள் பதவி உயர்வு பெற்றது போல் பெற்றுத் தருவோம் என தேர்தலுக்காக கோஷம் வைத்துள்ளது. இவர்கள்தான் 2003ல் புதிய பதவி உயர்வே வேண்டாம் என ஒப்பந்தம் போட்டவர்கள். இந்த கூட்டணியை ஊழியர்களிடம் அம்பலப்படுத்த வேண்டும்.

**புதிய பதவி உயர்வின் சிறப்பு அம்சங்கள்:**

- ★ தேர்வுகள் இல்லாமல் பதவி உயர்வு
- ★ அனைத்து கேடர்களும் பயன் பெறும் வகையில்.
- ★ Matching Saving இல்லாமல்.
- ★ வேலை பளு மற்றும் பதவிகள் சரண்டர் இல்லாமல்.
- ★ அனைத்து பதவி உயர்வுகளுக்கும் FR22 1(a) (i).
- ★ JA, SA மற்றும் Liftman, Draughtsman, Civil Wing, Driver உள்ளிட்ட அனைத்து தோழர்களுக்கும் பதவி உயர்வு.
- ★ Non-Executive கேடர்களுக்கு இரண்டு புதிய (9200 - 250 - 13200), (9850 - 250 - 14600) ஊதிய விகிதங்கள்.
- ★ எந்த உரிமையையும் சலுகை களையும் இழக்கவில்லை.
- ★ DoTயிலிருந்து BSNLக்கு விருப்பம் கொடுத்தவர்களுக்கு 4, 7, 8, 3 என 4 பதவி உயர்வுகள்.
- ★ BSNLல் புதிதாக சேர்ந்தவர்களுக்கு 8, 8, 8, 8 என 4 பதவி உயர்வு கள்.
- ★ SC/ST தோழர்களுக்கு அதிகாரிகள் பதவி உயர்வில் உள்ளது போல இருக்கும் சட்ட உரிமையை விட்டுக் கொடுக்காமல் பெற்றது.
- ★ தற்போதைய உடன்படிக்கை OTBP / BCR / Gr.IV பதவி உயர்வு பயனளித்தால் அதை தொடரலாம்.
- ★ இந்தத் திட்டத்தினால் BSNLக்கு ஆகும் செலவு சராசரியாக வருடத்திற்கு 700 கோடி.

★ TTA தோழர்களுக்கு OTBP, BCR பதவி உயர்வில் உயர் சம்பளம் இதுவரை கிடையாது. புதிய பதவி உயர்வு திட்டத்தின் மூலம் தடை அகற்றப்பட்டு உயர் ஊதியம் கிடைக்கும்.

இந்த நான்கு கட்ட பதவி உயர்வை பெற்றுத் தந்த United Forumத்தை பாராட்டுவதோடு இதன் பலனை அனைத்து ஊழியர்களிடமும் எடுத்துச் செல்வோம்.

**BSNLEU தலைமையிலான UF சின்னமான செல்போன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்வோம்.**

## பயிற்சிக்கால உதவித் தொகை

நமது சங்க கோரிக்கையை ஏற்று புதிய TTA ஊழியர்களின் பயிற்சிக்கால உதவித் தொகை CDA சம்பள விகிதத்திலிருந்து மாற்றப்பட்டு IDA சம்பள விகிதத்தில் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நிலுவைத் தொகையாக ரூ. 5.000/- வரை கிடைக்கும். ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 50% பஞ்சப் படியை இணைக்க வேண்டும் என நமது சங்கம் எடுத்த முயற்சியின் விளைவாக BSNL வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது DoTயின் அனுமதி கேட்டு அனுப்பப் பட்டுள்ளது. ஓய்வு பெற்றோருக்கும் பாதுகாப்பாக இருப்பது BSNLEU.

## இணைப்பு

ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 50% பஞ்சப்படியை இணைக்க வேண்டும் என நமது சங்கம் எடுத்த முயற்சியின் விளைவாக BSNL வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. DoTயின் அனுமதி கேட்டு அனுப்பப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்றோர் நலனுக்கும் பாதுகாப்பாக இருப்பது BSNLEU.

## அவர்கள் தவறை நாம் சரிசெய்தோம்

சீரமைக்கப்பட்ட கேடரில் பணிபுரிந்து அடிப்படைக் கேடரில் 26 வருடம் முடிப்பவர்களுக்கு உயர் ஊதியம் (BCR) 01.12.98 முதல் வழங்கப்பட்டு வருகிறது. 26 வருடம் முடித்த நாளிலிருந்து உயர் ஊதியம் கொடுப்பதற்குப் பதிலாக வருடத்தில் 2 முறை மட்டுமே அதாவது ஜனவரி, ஜுலை மாதங்களிலிருந்து அமுல்படுத்தப்பட்டது. இதனால் பல ஊழியர்களுக்கு இழப்பு ஏற்பட்டது.

26 வருடம் முடித்த தேதியிலிருந்து வழங்க வேண்டும் என்று NFTE சங்கம் கோரிக்கை எழுப்பவில்லை. நாம் அங்கீகாரம் பெற்ற பின்பு பிரச்சினையைக் கிளப்பினோம். கடுமையாக விவாதித்தோம். நிர்வாகம் நமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டு 26 வருடம் பணி முடித்த தேதியிலிருந்து வழங்க நவம்பர் 2006ல் உத்தர விட்டது. அதன்படி தமிழ் மாநிலத்தில் 1.7.2005 முதல் 26 வருடம் பணி முடித்த தேதியிலிருந்து உயர் சம்பளம் பெற்று வருகின்றனர்.

விடுபட்ட ஊழியர்களுக்கும் உரிய தேதியிலிருந்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று 1.12.98 முதல் 30.6.05 வரை உயர் ஊதியம் பெற்றவர்களுக்கும் உத்தரவு 1.7.08ல் வெளியிடப்பட்டது. இதன் மூலம் ஆயிரக்கணக்கான சீனியர் தோழர்கள் ஆயிரக்கணக்கில் நிலுவைத் தொகையுடன் பயன் பெறுவர். உதாரணமாக கோவை மாவட்டச் செயலர் தோழர் வெங்கட்ராமன் சுமார் 18 ஆயிரம் ரூபாய் நிலுவையும், ஆண்டுயர்வை ஒவ்வொரு ஆண்டும் ஐந்து மாதங்களுக்கு முன்னரும் பெறுவார். NFTE சங்கம் செய்த தவறுகளையும் சரிசெய்து நாம் சாதனை படைத்துள்ளோம்.

**சாதனை புரிந்திட்ட BSNLEU சங்கத்திற்கு "செல்" சின்னத்தில் வாக்களிப்போம்.**

# பங்கு விற்பனைக்கு எதிராக...

தொலைத் தொடர்புத்துறை பொதுத் துறையாக மாறினால் பாலாறும் தேனாறும் ஓடும் என்று ஊழியர்களை ஏமாற்றி இலாகாவை பொதுத்துறையாக மாற்ற அரசுக்கு துணை போனவர்கள்தான் NFTE மற்றும் FNTO சங்கங்கள். தனியார் மயமாக்கலின் முதல்படிதான் பொதுத்துறை மாற்றம் என்று எச்சரித்து அன்றே நாம் போராடினோம்.

முதல் சங்க அங்கீகாரத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் NFTE BSNL சங்கம் என்ன நிலைபாடு எடுத்தது? "சமுதாயத்தில் அமைப்பு ரீதியாக திரட்டப்பட்ட நடுத்தர வர்க்கம், பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிகின்ற காரணத்தால், ஏற்கனவே வளமான வாழ்க்கைத்தரம் பெற்ற அவர்கள் மேலும் சலுகைகளைப் பெறும் எண்ணத் தோடு லாபமீட்டக்கூடிய பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்கக்கூடாது என்று கூச்சலிட்டு தங்களை பாதுகாத்துக் கொள்ள அனுமதிக்க முடியாது" என்று ஜுன் 2004 டெலிலேபரில் எழுதியது. அங்கீகாரத்தில் இருந்த போது பங்கு விற்பனைக்கு எதிரான போராட்டத்தை வீண் கூச்சல் என்று சொல்லி அரசுக்கு வால் பிடித்த சங்கம் இன்று பங்கு விற்பனைக்கு எதிராக போராடுவதாக வாய்ப்பந்தல் போடு கின்றது.

நாம் அங்கீகாரம் பெறுவதற்கு முன் பிருந்தே பங்கு விற்பனைக்கு எதிராக போராடி வருகிறோம். BSNL தலைமையகத் தின் புதியக் கட்டிடத் திறப்பு விழா அன்று, தனது பணியிலிருந்து ஓய்வு பெற இருந்த முன்னாள் CMD திரு. A.K. சின்ஹா, நமது BSNL நிறுவனத்தின் பத்து சத பங்குகளை விற்பனை செய்ய உள்ளதாக சொன்னார். நமது கடுமையான எதிர்ப்பால் ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் IDA இணைப்பிற்கான போராட்டத்தின் போதும், பத்து சதவிகித பங்கு விற்பனை என்ற பிரச்சினை முன்னுக்கு வந்தது. நாம் கடுமையாக எதிர்த்துப் போராடியதால் அது மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது.

சேவை விஸ்தரிப்பிற்கும், நவரத்னா அந்தஸ்து பெறவும் பங்கு விற்பனை அவசியம் என்று நிர்வாகம் வாதாடியது. சுமார் நாற்பதினாயிரம் கோடி ரூபாய் வங்கி யில் இருப்பாக வைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் சேவை விஸ்தரிப்பிற்கான வெறும் பதினையாயிரம் கோடி ரூபாய்க்கு பங்கு விற்பனை என்று சொல்வதும், பட்டியலிடப்படாத நிறுவனங்கள் எல்லாம் நவரத்னா அந்தஸ்து பெறும்போது BSNLக்கு மட்டும் அதை காரணம் காட்டி தர மறுக்கவும் நியாயமற்ற காரணங்கள் என்று கடுமையாக வாதாடி நிறுத்தி வைத் தோம். பின்னர் நாம் பங்கு விற்பனையை ஏற்றுக் கொண்டால் அனைத்து BSNL ஊழியர்களுக்கும் குறைந்த விலையில் (ரூ.10/-க்கு) ஐநூறு பங்குகளை தருவதாக ஆசை காட்டியது. நமது தனியார்மய எதிர்ப்புப் பிரச்சாரத்தின் காரணமாக ஊழியர்கள், நம்மை விலைபேச நினைத்த நிர்வாகத்தின் ஆசை வலைக்குள் விழ மறுத்து விட்டனர். நமது எதிர்ப்பின் காரண மாக, மத்திய தொலைத் தொடர்பு அமைச்சர் ஊழியர் சங்கங்களை கலந்தா

லோசிக்காமல் IPO எனும் பங்கு விற்பனை அறிமுகப்படுத்தப்பட மாட்டாது என உறுதி அளித்துள்ளார்.

தற்போது நிர்வாகம், இணையதளத்தில் நடத்திய வாக்கெடுப்பில் 78 சதமானவர்கள் IPOவிற்கு ஆதரவாக உள்ளனர் என தவறான தகவல்களை தருகிறது. குளுகுளு அறையில் அமர்ந்து கொண்டு BSNL வளர்ச்சியில் அக்கறை இல்லாமல் நமது நிறுவனத்தின் கனிணியின் இணையத்தளத்தில் உலாவிக் கொண்டிருக்கும் ஒரு சில அதிகாரிகள் வேண்டுமெனில் வாக்களித்திருக்கலாம். எனவே நாம் அனைத்து ஊழியர்களிடையேயும் ஒரு வாக்கெடுப்பு நடத்தும்படியும், அதில் 50 சதத்திற்கும் மேலான ஊழியர்கள் பங்கு விற்பனைக்கு எதிர்ப்பு தெரிவித்தால், அதற்கான முயற்சிகள் அனைத்தையும் நிர்வாகம் கைவிட வேண்டும் என சவால் விட்டுள்ளோம். ஆனால் நிர்வாகம் நொண்டிச் சாக்குகளை சொல்லி தவிர்க்கிறது. போராட்டம் தொடர்கிறது.

**அரசின் கொள்கை முடிவுகளை தடுக்க முடியாது என அரசிற்கு ஆதரவாக நிற்பவர்கள் எல்லாம் எதிரணியில் கைகளை இணைத்துக் கொண்டு நிற்கின்றனர்.** ஊழியர்களிடம் உண்மையைச் சொல்லி, அவர்களைத் திரட்டி, அரசின் கொள்கைகளை எதிர்த்துப் போராடி, தனியார்மயமாக்கலைத் தடுத்து நிறுத்தி வரும் BSNL ஊழியர் சங்கம் கம்பீரத்தோடு தேர்தலில் “செல்போன்” சின்னத்தில் களம் காண்கிறது.

**பங்கு விற்பனையை தொடர்ந்து தடுத்து வரும் BSNLEUவின் “செல்போன்” சின்னத்தில் வாக்களித்து BSNLஐ காத்திடுவோம். நமது பாதுகாப்பையும் உறுதி செய்வோம்!**

## அந்நிய நேரடி முதலீடு

**தொலைத் தொடர்புத் துறையில் தற்போதுள்ள 74 சதவிகித அந்நிய நேரடி முதலீட்டை அரசாங்கம் நிலை படுத்த முயற்சித்த போது நாம் கடுமையாக Joint Forum சார்பாக எதிர்த்தோம். ஆனால் NFTE BSNL சங்கம் அதனுடைய பத்திரிக்கையில் அந்நிய நேரடி முதலீட்டின் மூலமாக வரும் அன்னிய மூலதனத்தின் பலன்களை தனியார் நிறுவனங்கள் மட்டுமே ஏன் அனுபவிக்க வேண்டும். நமது BSNL நிறுவனம் ஏன் அனுபவிக்கக் கூடாது என்று கேள்வியை எழுப்பியது. (ஆதாரம் ஜுலை 2004, டெலி லேபர்) இன்றைக்கு பங்கு விற்பனைக்கு எதிராக போராடுகிறேன் என்று போலி வேடம் போடுபவர்கள் அன்றைக்கே, உள்நாட்டு முதலாளிகளுக்கு மட்டுமல்ல, பன்னாட்டு நிறுவனங்களுக்கே BSNLஐ விற்பதற்கு உடன்பட்டு நின்றவர்கள் தான் என்பதை மறைக்கப் பார்க்கிறார்கள். பங்கு சந்தையில் நுழைந்து மிகப்பெரிய அளவில் லாபம் ஈட்டிய அந்நிய மூலதனம் இன்று காணாமல் போகிறது. இருபதினாயிரம் புள்ளிகளுக்கு மேல் சென்ற பங்குச் சந்தை ஒன்பதினாயிரம் புள்ளிகளுக்கு கீழே சென்றுள்ளதை பார்க்கும் போது, அந்நிய நேரடி முதலீட்டை எதிர்க்கும் நமது நிலைபாடு சரி என்பதை நிரூபிக்கிறது. நிலையற்ற நீர்க்குமிழிகளைக் கண்டு, ஊழியர் நலனைக் காவு கொடுக்கத் துணிந்தவர்களை அடையாளம் காண்போம்.**

# 50% பஞ்சப்படி இணைப்பு

பஞ்சப்படி ஐம்பது சதவிகிதத்தைத் தாண்டியது என்று சொன்னால் அடுத்த ஊதிய மாற்றம் வரையிலான இடைக்காலத்தில் அந்த ஐம்பது சதவிகித பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப் படும். மத்திய அரசு ஊழியர்களுக்கு ஏற்கனவே ஐம்பது சதவிகித பஞ்சப்படி அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்கப்பட்டு விட்ட சூழ்நிலையில் பொதுத்துறை நிறுவன ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பான CPSTU, பஞ்சப்படி இணைப்பை வலியுறுத்தியது. இதற்காக பல கட்ட இயக்கங்களை நாம் நடத்தினோம்.

டிசம்பர் 2007ல் கூடிய மத்திய அமைச்சரவைக் கூட்டம் பொதுத்துறை ஊழியர்களுக்கான 1.1.2007 முதல் பஞ்சப்படி இணைப்பிற்கு அனுமதி அளித்தது. 11.1.08 அன்று நடைபெற்ற தேசியக் கவுன்சில் கூட்டத்தில் நாம் பஞ்சப்படி இணைப்பை அமுல்படுத்தக் கோரியதற்கு அமைச்சரவையிலிருந்து உத்தரவு பெற்றவுடன் வழங்கப்படும் என்று உறுதி கூறப்பட்டது. 1.5.08 அன்று அமைச்சரவையும் உத்தர விட்டது. ஆனால் நிர்வாகம் காலதாமதப்படுத்தியது.

பென்சனில் பிரச்சினை இருப்பதால் பஞ்சப்படி இணைப்பு சாத்தியம் இல்லை என்று பிரச்சாரம் செய்த NFTE உட்பட அனைத்து ஊழியர் சங்கங்களையும், அதிகாரிகளையும் ஒன்றுதிரட்டினோம். மே மாதம் 28ம் தேதி ஒரு நாள் தார்ணா போராட்டம் நடத்த அறைகூவல் விடப்பட்டது. அந்த தார்ணா போராட்டம் கிட்டத்தட்ட ஒரு வேலை நிறுத்தம் போல மிக எழுச்சியுடன் நடைபெற்றது. நிர்வாகம், பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைக்க வேண்டுமென்றால் பத்து சதவிகிதப் பங்கு விற்பனையை ஏற்க வேண்டும், பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற பொருளாதார கோரிக்கைகளைக் வற்புறுத்தக் கூடாது என்று நிபந்தனை விதித்தது.

இந்த மோசமான நிபந்தனைகளை ஏற்க முடியாது என்று அறிவித்து இரண்டு நாட்கள் தார்ணா போராட்டத்தை நடத்த முடிவெடுத்தோம். பஞ்சப்படி இணைப்பிற்காக நமது மற்ற உரிமைகளை அடகு வைக்க மாட்டோம் என்று கோபாவேசத்துடன் அந்தப் போராட்டம் நடைபெற்றது. 29ம் தேதி அன்று அமைச்சர் முன்னிலையில் நடை பெற்ற பேச்சுவார்த்தையில் அன்று மாலைக்குள் உத்தரவு வெளியிடுவதாக நிர்வாகம் ஏற்றுக் கொண்டதின் அடிப்படையில் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. அதே போல் உத்தரவும் அன்று மாலையே வெளியானது.

## செல் சின்னம்

BSNL ஊழியர் சங்கத்துக்கு "செல்" சின்னம் கடந்த தேர்தல்களைப் போலவே வழங்க வேண்டும் என விண்ணப்பித்திருந்தோம். கடந்த இரண்டு தேர்தல்களிலும் FNTO சங்கம் "ரோசாப்பூ" சின்னத்தில்தான் போட்டியிட்டது. இந்தத் தேர்தலில் NFTEயுடன் கூட்டணி கண்டு "இணைந்த கைகளுக்கு" வாக்களிக்கப் போகிறது. நாம் "செல்" சின்னத்தைக் கேட்டவுடன் FNTOவும் "செல்"லுக்குப் போட்டியிட்டது. ஆனால் நிர்வாகமும் தொழிலாளர் நல அமைச்சகமும் "செல்" சின்னம் நமக்குத்தான் என உறுதிப்படக் கூறிவிட்டன.

இதை எதிர்த்து டெல்லி, பாட்டியாலா நீதிமன்றத்தில் FNTO இடைக்காலத் தடை கேட்டு விண்ணப்பித்தது. நீதிமன்றம் FNTOவின் கோரிக்கையை நிராகரித்து விட்டது.

**"செல்" சின்னம் BSNLEUவுக்குத்தான். வாக்களிப்பீர் "செல்" சின்னத்தில்.**